# இரு வரிகளில் இரட்டைக் காப்பியங்கள்

**LALITHA SITARAMAN,**
*Manager, IT Dept., C.O.*



எழுத்தாளர் திரு சுஜாதா அவர்கள் ஒரு வரிக் கதைகள் எழுதுவது எப்படி என்று குமுதத்தில் சுவாரசியமாக விளக்கி எழுதிக்கொண்டிருந்த நேரம் அது ஏறக்குறைய மூன்று வருடங்கள் இருக்குமென நினைக்கிறேன். அந்தக் கால கட்டத்தில் எனக்குத் தோன்றிய உணர்வுகள் மேலே கொடுத்த தலைப்பில் எழுத வேண்டு மென்ற உந்துதலைக் கொடுத்தன. அதற்கு நேரம் இப்போதுதான் கூடி வந்திருக்கிறது.

நான் சொல்லியிருக்கும் இரட்டைக் காப்பியங்களில் ஒன்றிற்கு காப்பிய ஆசிரியர் என்னுடைய அம்மா. இல்லத்தில் மிகக் கடுமையான பிரச்சனைகளைச் சந்தித்து அவற்றினூடே புகுந்து புறப்பட்டு எதற்காகவும் எதையும் விட்டுக் கொடுத்து விடாமல் தன் கடமைகளைக் குறைவின்றி அயராமல் செய்து வரும் என் அம்மாவைப் பல உறவினர்களும் நண்பர்களும் கவனித்துப் பாராட்டுவார்கள். அதில் நானும் ஒருத்திதான். இருந்தாலும் அமைதிக்காலங்களில் அவர் வாழ்க்கையை இன்னும் சிறது நயமுடன் அணுகலாமே என்பது என் கருத்து. அம்மாவுக்கும் எனக்கும் நிரம்பக் கருத்து வேறுபாடு, ரசனை வேறுபாடு எல்லாம் உண்டு.

அம்மா 'மரத்தில் இருக்கும் பலாக்காயை விட கையில் இருக்கும் களாக்காய்தான் உயர்ந்தது' என்று நினைப்பவர் என்றால் 'மடைத் தலையில் ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கு' என்னுடைய பாராட்டைப் பெறும்.

எல்லா வேலைகளையும் நேரந்தவறாமல் குறித்த நேரத்திற்கு வெகு முன்பாகவே அம்மா செய்துவிடுவார். நான் அதற்கு நேர் எதிர். இங்கு கட்டுரையின் மையக் கருத்திலிருந்து சிறிது விலகி நேரத்தைப் பற்றிய எனது உணர்வுகளை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். எனக்கு நேரத்துடன் ஓயாமல் பந்தயம் வைத்துக் கொண்டது போலிருக்கும். பந்தயத்தில் பெருவாரியான நேரங்களில் நேரம் முன்பு சென்றுவிடும்; நான் அதன் பின்பு சென்று கொண்டிருப்பேன்! வியாபாரத்தில் அதிவர்த்தகம் (overtrading) செய்யும்போது எப்படி பணப்பற்றாக்குறை (cash crunch) ஏற்படுமோ அது போல் எனக்கு நேரப்பற்றாக்குறை! இதைப் பற்றி நான் விளையாட்டாக ஒரு சமாதானம் செய்து கொள்வது உண்டு: கம்ப்யூட்டரில் கோப்பு ஏற்பாட்டு முறைகளிலும் (file organisation) ஞாபக ஏற்பாட்டு முறைகளிலும் (memory oganisation) ஒன்று சேர்த்து துண்டுகளைத் தவிர்த்தல் (compaction and defrag-mentation) என்னும் ஒரு செயல்பாடு அங்கீகரிக்கப் படுகிறது. சிறு சிறு இடைப்பட்ட துளைகளாக (holes) சேமிக்கும் தகடோ (disc) அல்லது மெமரியோ வீணா வதைத் தவிர்ப்பதற்காகவும் செயல்பாட்டுத் திறனை உயர்த்துவதற்காகவும் சிறிது அதிகச் செலவினங்களைப் (overheads) பொருட் படுத்தாமல் கம்ப்யூட்டர் அவ்வப்போது செய்யும் ஓர் செயலே இவ்வாறு அழைக்கப் படுகிறது. இது போல் நேரத்தில் அதிகத் துளைகள் விழாமல் முடிந்த அளவு அதைப் பயனுள்ளதாக்கிச் செயலில் ஆழ்ந்து ஒன்றிச் செய்யும் போது நேரந்தவறுதலும் ஏற்படுகிறது என நான் நினைத்துக் கொள்வேன். எப்படிப் பிறருடைய தவறுகளைத் தாராளமாக மன்னிக்க வேண்டுமோ அது போல நம் முடைய தவறுகளையும் ஓரளவாவது மன்னித்துக் கொண்டால்தான் உள்ளம் குற்ற உணர்வின்றி புத்துணர்ச்சியுடன் மேற்கொண்டு செயலாற்ற முடியும் என்ற கூற்றுப்படிதான் என் நேரந்தவறும் தன்மைக்கு எப்போதாவது நானே சமாதானம் சொல்லிக் கொள்வேனே தவிர மற்றபடி எப்போதும் நேரந் தவறாமையைக் கடைபிடிப்பவர்களைக் கண்டு எனக்கு வியப்பும் மரியாதையும்தான். நம்முடைய நேரத்தின் மீது பிறரின் நேரமும் பிறருடைய நேரத்தின் மீது நம் நேரமும் சார்ந்திருக்கும் தருணங்களில் நாம் நேரந்தவறாமையைக் கடைப்பிடித்தே ஆக வேண்டும்.

வேலைகளைப் பரபரப்பாகவும் சுறுசுறுப் பாகவும் செய்யும் என் அம்மாவின் சங்கீத ரசனையும் அவ்வாறே இருக்கும். அவரே முறைப்படிக் கற்றுக் கொண்டதால் நன்கு பாடுவார். ஆனால் ரசனை என்று வரும்போது அவருக்கு திருவிழா அமர்க்களம் போல் விறுவிறுப்பாகப் பாடப்படும் பாட்டுகளும் ஸ்வரப்ரஸ்தாபங்களுமே பிடிக்கும். எனக்கோ இதமான ராக ஆலாபனையில் அம்பாளைத் தரிசிப்பது போலிருக்கும். தோடியும் ஹிந்தோளமும் இழுத்துப் பாடப்படுவதால் தனக்குப் பிடிக்காது என்று அம்மா கூறுவது எனக்குக் குற்றமாகக் கூடத் தோன்றும். ஆக, அடித்துப் பெய்யும் மழை அம்மா என்றால் அமைதியாக ஓடும் ஆறு நான். (அட, இதிலிருந்தே அம்மா இன்றி நான் இல்லை என்பது கூட வந்துவிட்டதே!) அம்மாவிடமும் கவிதை

நயம் சில சமயங்களில் தென்படும். 'உன் சந்நிதியில் வந்து குழந்தை வீடு வாங்கியிருக்கிறாள். அவளைக் கவனித்துக் கொள் என்று அம்பாளிடம் வேண்டிக் கொண்டுவந்தேன்' எனவும் 'நான் உனக்காக அவியல் செய்து விட்டு சபரி போல் ருசி பார்த்தேன்' எனவும் அவர் கூறியவை மறக்க முடியாதவை. இருந்தும் எப்போதும் கவிதை தேடும் என் மனது சில சமயங்களில் அவரிடம் ஏமாற்றமடைவதுண்டு. இத்தனையும் எழுதியிருப்பது, எதிர்பாராத விதமாக அவரிடமிருந்து வெளிப்பட்ட காவிய வரியின் அழகை உணர்த்துவதற்காகத்தான்.

தன்னுடைய சிக்கல்களைப் பொருட்படுத்தாது என்னுடைய சிக்கல்களுக்குக் காது கொடுத்து எனக்கு ஆதரவுத் தோள் கொடுக்க ஓடி வந்திருந்தார் அம்மா. அச்சமயத்தில் நெருக்கடிகளைப் பேசிப் பகிர்ந்து கொண் டிருந்த போது ஒரு ஆழ்ந்த பெருமூச்சிற்குப் பிறகு அவர் சொன்னார். "என்னவாக இருந்தால் தான் நாம் என்ன செய்ய முடியும்?". அவர் தன் வழக்கத்திற்கு மாறாக மெல்லிய குரலில் அமைதியான முக பாவத்துடன் சொல்லிய விதமும் வரிகளின் ஆழமும் என்னுள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. இது சாதாரண வரிகள் இல்லை, காவிய வரிகள் என எனக்குத் தோன்றின. இது கையைலாகாத் தனத்துடன் ஒன்றையும் செய்ய முயற்சி செய்யாமல் விட்டுக் கொடுத்து விடுபவருடைய வாக்கியமல்ல; கடமை உணர்ச்சியோடு கர்ம வீரர் போல் செயலாற்றுபவர்களும் வாழ்க்கையில் சந்திக்கும் யதார்த்த நிலை. இதை அம்மா கூறியவுடன் ஒரு மாபெரும் காப்பியத்தை ஒற்றை வரியில் கேட்டது போல் எனக்குத் தோன்றியது. இந்தச் சூழ்நிலையின் தொடர்ச்சியாக அலுவலக நண்பர் சொன்ன வரி எனக்கு இரண்டாம் காப்பியமாகத் தோன்றியது. "அதற்கும் சேர்த்து இன்னும் இரண்டு ஸ்லோகங்கள் சொல்லப் போகிறோம்" என்று நண்பர் சொன்னதும் இவ்விரு வரிகளும் இரட்டைக் காப்பியங்கள் என எனக்குத் தோன்றின.

எதையும் ஏற்றுக்கொள்ளவும் எப்போதும் நம்பிக்கையுடனிருக்கவும் வலியுறுத்தும் இந்த இரண்டு வரிகளை இத் தலைப்பில் எழுதுவதற்குக் காரணமாயிருந்த சுஜாதாவின் ஒரு வரிக் கதை உத்திகளுக்கு என் நன்றி உரித்தாகுக.